விவிலிய வாரம்

19-25 செப்டம்பர் 2022

# விவிலிய ஞாயிறு

25.09.2022

## இறைவார்த்தையால் ஒளியூட்டப் பெற்று மாமன்றப் பாதையில்...

விவிலிய மாதம்

சிறப்புற திட்டமிடுதல் :

21, 28.08.2022

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!
இறை ஆசிரோடு கலந்த வணக்கங்கள்.

இன்றைய உலகு மிக அதிகமான பாதுகாப்பையும், மிக அதிகமான சொகுசு வாழ்க்கையையும் தேடுகிறது. இதற்காக மனிதன் தேர்ந்தெடுத்திருக்கும் ஓர் ஆயுதம் 'தனிமை'. தனித்திருந்தால் எனக்கு நிம்மதி; திருமணம் ஆகவில்லை என்றால் நிம்மதி; குறைவாக குழந்தைகள் அல்லது குழந்தைகளே இல்லையென்றால் நிம்மதி; எனவே தனிமைமீது ஒரு நாட்டம், ஒரு தேடல். அடுக்கு மாடி குடியிருப்புகள்; ஆனால் அயலார் ஒருவர் குடியிருக்கிறார் என்பதே தெரியாது. பல வருடங்கள் ஒரே மாடியில் குடியிருந்தாலும் இயற்கை சீற்றத்தில் - வெள்ளப் பெருக்கில் வெளிவரும்போதுதான் 'ஹலோ' சொல்லி அறிமுகமாகும் பரிதாப நிலை. அடுக்குமாடி குடியிருப்புகளில் முகவரிகள் தெளிவாக உள்ளன. ஆனால் முகங்கள் தான் தெரிவதில்லை.

இத்தகைய ஒரு வாழ்வை இன்றைய நாகரிகம் என்று சொல்லிக் கொள்வதில் ஓர் இறுமாப்பு; இவைகள் எல்லாமே போலிகள்; நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம். எதார்த்தங்களை, இயல்புகளை சந்திக்க விரும்புவதை மனிதர்கள் நாம் தவிர்க்கின்றோம். எனவே இத்தகைய 'தனிமை' கலாச்சாரத்தில் தப்பித்துக் கொள்கின்றோம். எனவே நொண்டிகளாக இருந்து நொண்டி சாக்குப் போக்குகளைத் தேடுகின்றோம்.

கிறிஸ்தவர்களின் புனித நூல் விவிலியம். இது மனிதனை கூறு போடாமல் கூடிவரச் செய்யும் இறைவார்த்தைகளைக் கொண்டுள்ளது. விவிலியத்தில் ஒவ்வொரு புத்தகத்தையும் அலசி ஆராய்ந்து பார்த்தால் மனிதர்கள் நாம் ஒரு சகோதரத்துவ வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதையே உணர்த்தும்.

'மனிதர்களை விட்டுவிட்டுப் பொருள்களைத் தேடுகின்றோம். இதயங்களை சம்பாதிப்பதற்குப் பதிலாக இருப்பவை களையே கூட்டுகின்றோம். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. 'விலைமதிக்க முடியாதவை நம்மிடம் இருப்பவை அல்ல,

நம்மிடம் இருப்பவர்கள் தான் என்ற வாழ்வின் இலக்கை நோக்கிப் பயணிப்போம்.

2021ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை அகில உலகக் கத்தோலிக்கத் திரு அவையில் நடைபெறும் ஆயர் மாமன்றம் இந்த நேரத்தில் நினைவுகூரப்பட வேண்டும். இணைந்துப் பயணிக்கும் திரு அவையாக நாம் உருவாக வேண்டி நமது திருத்தந்தை அவர்கள் இம்மாமன்றம் வழியாக அழைப்பு விடுக்கின்றார்கள். இணைந்து பயணிக்கும் திரு அவையே உண்மையான பணியையும் வாழ்வையும் குறிக்கக் கூடியது. அனைத்து இறை மக்களும் ஒருவர் ஒருவருக்குப் பணிபுரியத் தகுதி பெறவேண்டும். இனிவரும் காலங்களில் நமது நற்செய்தி அறிவிப்பு மனித இனத்தைப் பிரிக்கும் பல்வேறு கூறுகளையும் தாண்டி அமைய வேண்டும். கடவுளின் மிகச் சிறந்த படைப்பு மனிதர்கள். நமது உருவாக்கத்தில் கடவுளால் கொடுக்கப் பட்ட அந்த சாயலும் மாண்பும் என்றுமே காக்கப்பட வேண்டும். விண்ணுலகத் தந்தையின் ஒரே மக்கள் குடும்பம் என்பதை மறவாத, மறைக்காத நற்செய்தி அறிவிப்புப் பணியாக வேண்டும். மக்கள் அனைவரும் ‘ஒரே ஆளென’ (நெகெ 8:5) ஒன்றுகூடிவரும் நாளை எதிர்நோக்குவோம்.

இறைவார்த்தை ஒன்றே பிரிந்து கிடக்கும் நம்மை ஒன்று சேர்க்கும். ஒன்று சேர்ந்த நாம் திரு அவையில் எந்த விதப் பாகுபாடுகளுமின்றி பயணிக்க வேண்டும். அச்சூழலில் உண்மையான இறைவனையும் இறையாட்சியையும் காண முடியும். இறைவார்த்தையில் வாழ்ந்து பணி செய்ய வாழ்த்துகள்.

**திண்டிவனம்**
03.08.2022

**என்றும் அன்புடன்**

**அருள்பணி. உபால்டு மரியதாசன்**
*பொதுச்செயலர்,*
*தமிழக விவிலியப் பணிக்குழு,*
*முப்பணி மையம், திண்டிவனம்*

## உங்கள் கவனத்திற்கு. . .

1. இக்கையேடு உங்களுக்கு உதவிடும் ஒரு வழிகாட்டி மட்டுமே. தாங்கள் விரும்பினால் படைப்பாற்றலுடன் பலவற்றை முறையாகத் தயார் செய்து, பங்குத் தந்தையின் அனுமதியோடு தங்கள் பகுதியில் விவிலிய வாரத்தைச் சிறப்பிக்கலாம்.
2. வசதிக்கும் சூழலுக்கும் ஏற்ப, சிறப்பிக்கும் குழுக்களையும் மாற்றி அமைத்துக் கொள்க.
3. திருப்பலிக் கொண்டாட்டம் இடம் பெறாத சூழல்களில் (வார நாள்களில்) விவிலிய வழிபாடுகளை நடத்துவதற்கு வழிகாட்டலாம்.
4. கிளைப் பங்குகளிலும் சிறப்பு ஏற்பாடுகள் செய்து விவிலிய வாரத்தைக் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.
5. தங்கள் பகுதியில் இடம்பெறும் விவிலிய வாரச் சிறப்பு நிகழ்வுகளை எம்முடன் பகிர்ந்துகொள்க (புகைப் படங்கள் மற்றும் செய்திகளை அனுப்பி வைக்கவும்). Whatsapp மூலம் அனுப்புக.
6. விவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கையை மறைமாவட்டச் செயலர் வழியாகத் தமிழக முப்பணி நிலைய இயக்குநருக்கு அனுப்பி உதவிடுக.

## நன்றிகள். . .

விவிலியப் பிரதிகள் திண்டிவனம், முப்பணி நிலையத்திலும் மறைமாவட்ட அருள்பணி நிலையங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும். வாங்கிப் பயன் பெறுக.

மறைமாவட்ட அளவில் விவிலியப் பணிகளைத் தமிழக விவிலியப் பணிக்குழுவோடு இணைந்து ஆற்றும் மறைமாவட்ட செயலர் தந்தையர்களுக்கும், விவிலியப் பணியாற்றும் இருபால் துறவியருக்கும், தன்னார்வமாய் விவிலிய இறைப்பணி செய்யும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

# பொருளுள்ள கொண்டாட்டத்திற்கு. . .

தமிழக ஆயர் பெருமக்களின் ஆசியுடன் 1974–ஆம் ஆண்டு முதல் 'விவிலிய ஞாயிறு' தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தொடக்கத்தில் ஒரு நாள் கொண்டாட்டமாக மட்டும் இருந்த விவிலிய ஞாயிறு, 1988 முதல் விவிலிய வாரமாகவும், இன்று பல பங்குகளில் விவிலிய மாதமாகவும் செப்டம்பர் மாதம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. நம் தமிழக இறைமக்கள் இறைவார்த்தையின்மீது கொண்டுள்ள பேரார்வமும், அவர்கள்மீது இறைவார்த்தை கொண்டுள்ள தாக்கமும் நம் எல்லாருக்கும் மகிழ்ச்சியை அளிக்கின்றன. இந்தியத் திரு அவையின் விவிலியப் பணிகளில் தமிழகம் முன்னணியில் இருப்பதைக் கண்டு உள்ளம் பெருமிதம் அடைகின்றது. இதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

தமிழகத் திருஅவையில் இவ்வாண்டு 19.09.2022 முதல் 25.09.2022 வரை விவிலிய வாரம் கொண்டாடப்படுகின்றது. எனவே, நம் பங்குகளிலும் கிளையூர்களிலும் அனைத்து நிறுவனங்களிலும் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு, விவிலிய வாரத்தைக் கொண்டாடத் தமிழக விவிலியப் பணிக்குழுவும் உங்கள் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவும் உங்களுக்கு அன்புடன் அழைப்பு விடுக்கின்றன. உங்களுக்கு உதவுவதற்குச் சில பரிந்துரைகள் தரப்படுகின்றன:

## 1. செயல்திட்டங்களை உருவாக்குதல்

### அ. ஆகஸ்டு மாதம் 21, 28 (ஞாயிறுகள்) செய்ய வேண்டியவை:

விவிலிய வாரம் முழு வெற்றி பெற, பங்கு அருள்பணியாளர், இருபால் துறவியர், ஆசிரியர்கள், வேதியர், கோவில் பணியாளர்கள், இளையோர், பங்கு விவிலியப் பணிக்குழு, பங்குத் திருவழிபாட்டுப் பணிக்குழு, பக்த சபையினர், அன்பியப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இணைந்து செயல்படுதல் அவசியம்.

- *விவிலிய வார விழாக் குழுவை அமைத்தல்*
- *திட்டம் தீட்டுதல்*
- *பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு, தயாரிப்புப் பணிகளில் ஈடுபடுதல்*

### ஆ. செப்டம்பர் மாத முதல் ஞாயிறு செய்ய வேண்டியவை

பங்கில் விவிலிய வாரம் சிறப்புற அமைய இன்றிலிருந்தே திருப்பலியில் செபிக்கப்படும்.

19.09.2022 திங்கள் முதல் 25.09.2022 ஞாயிறு வரை ஒரு வாரம் முழுவதும் நமது பங்கில் விவிலிய வாரம் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதைத் திருப்பலியில் அறிவித்தல். வார நாள்களில் நடைபெற உள்ள விவிலிய நிகழ்வுகளையும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் விளக்கிக் கூறுதல்; யார் யார் பொறுப்பாளர் என்பதையும் அறிவித்தல். விவிலிய வாரத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்கத் தூண்டுதல். விவிலிய வார திருவழிபாடு நிகழ்வுகளை மாலையில் சிறப்பித்தல். திருப்பலிக்கு முன்பு விவிலியப் போட்டிகள் நடத்துதல்; திருப்பலிக்குப் பின்பு விவிலிய கலை நிகழ்வுகள் நடத்துதல். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஏராளமான பரிந்துரைகளை செயல் படுத்துங்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழுவாக திருப்பலி யினையும் மற்றும் விவிலிய நிகழ்வுகளையும் நடத்தவும்.

## விவிலிய மாதம், வாரம், ஞாயிறு

1. *சுவரொட்டிகள் தயார் செய்து ஆங்காங்கே மக்கள் பார்வைக்கு வைத்தல் (முடிந்தவரை பிளாஸ்டிக் தவிர்க்கவும்).*
2. *பதாகைகள் தயார் செய்து கையில் ஏந்தலாம்; ஆலயத்தில் தொங்கவிடலாம்.*
3. *செப்டம்பர் மாதம் முழுவதும் திருப்பலிக்கு முன்பும் பின்பும் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும். பாடல்கள் இறைவார்த்தை மையப் பாடல்களாக பார்த்துக் கொள்ளலாம். VBS பாடல்களைப் பயன்படுத்தலாம்.*
4. *விவிலிய வாரம் முழுவதும் (ஞாயிறு தவிர) மாலை நேர திருப்பலிகள் வைக்கலாம். கொடுக்கப்பட்டிருக்கும் சிந்தனைகளின் அடிப்படையில் திருப்பலி, பகிர்வுகள் நடைபெறலாம். அந்தந்த குழுக்கள் திருப்பலியை சிறப்பிக்கலாம்.*
5. *விவிலிய ஞாயிறு மற்றும் விவிலிய வார திருப்பலிகளில் விவிலியம் / புதிய ஏற்பாடு இவைகளை காணிக்கையாகச் செலுத்தி அவைகளை ஏழைகளின் / சிறப்பு மக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கலாம்.*
6. *விவிவிலிய கண்காட்சிகள் பங்குகளில் ஏற்படுத்தி சிறப்புறச் செய்யவும். இந்த விவிலியக் காட்சிகள் பங்குகளில் அல்லது தளங்களின் மைய இடங்களில் நிரந்தரமாக இருக்கலாம். இல்லையெனில் ஒரு மாதம் தற்காலிகமாகவும் வைக்கலாம்.*
7. *விவிலியக் கட்டுரைகள், விவிலியம் சார்ந்த பத்திரிகைகள், விவிலிய படக்கதைகள், விவிலிய ஒலி ஒளித் தகடுகள் வாங்கி வீடுகளுக்கு / குழந்தைகளுக்கு விற்பனை செய்யலாம். மறைமாவட்ட பணிக்குழுவிடம் (மறைக்கல்வி / விவிலியம் / திருவழிபாடு) நிச்சயமாக இருக்கும்.*

8. *விவிலிய மாதத்தில் / வாரத்தில் ஒரு நாள் அல்லது ஒவ்வொரு நாளும் விவிலிய மாலை என்று வைக்கலாம். இதில் மேடைகளில் ஒரு நாள் விவிலியம் சார்ந்த சொற்பொழிவுகள், ஒரு நாள் விவிலிய வினாடி வினா (வயது குழுக்கள்), ஒரு நாள் விவிலிய மனப்பாடம், விவிலிய மாந்தர் மாறுவேடம், ஒரு நாள் விவிலிய நாடகங்கள், ஒரு நாள் விவிலிய மாந்தர், கதைகள் அடங்கிய சினிமாக்கள், ஒரு நாள் விவிலிய சிறப்பு சொற்பொழிவு / கருத்துரை என்று பல விதங்களில் இந்த விவிலிய வாரத்தில் விவிலிய மாலையைச் சிறப்பிக்கலாம்.*

9. *விவிலிய மாந்தர்கள், புத்தகங்கள் கண்காட்சி நடத்துதல்.*

10. *விவிலியத்திலிருந்து ஒரு வாக்கியம் சொன்னால் புன்சிரிப்போடு கூடிய கைதட்டல் கொடுத்துப் பாராட்டவும்.*

## 2. வருடம் முழுவதும் விவிலியத்தைச் சிறப்பிக்கச் சில பரிந்துரைகள்

- *வீடுகளிலும் நிறுவனங்களிலும் விவிலியத்தை அரங்கேற்றம் செய்தல்.*
- *விவிலிய வழிபாடுகள் மற்றும் குழுத் திருப்பலிகள் கொண்டாடுதல்.*
- *விவிலிய பேட்ஜ், ஸ்டிக்கர் தயாரித்து வழங்குதல்.*
- *இறைவார்த்தைப் பகிர்வுக் குழுக்களை நடத்துதல்.*
- *அன்பியங்களில் விவிலிய நாளைக் கொண்டாடுதல்.*
- *விவிலியத்தைச் சலுகை விலையிலோ, இலவசமாகவோ வழங்க நன்கொடையாளர்களை இனம் காணுதல்.*
- *விவிலியம் பரிசளித்தல், விவிலியம் வங்கி உருவாக்குதல்.*
- *ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் ஒலி பெருக்கி வழியாக இறைவார்த்தையை முழக்கம் செய்தல், விவிலியப் பாடல்களையும், நிகழ்ச்சிகளையும் ஒலி பரப்புதல், விவிலிய வாரக் கொண்டாட்ட நிகழ்வுகளையும் நினைவூட்டி அறிவித்தல்.*
- *விவிலிய விளையாட்டுகள், வினாடி–வினாப் போட்டிகள், விவிலிய கதாபாத்திரங்களாக நடித்தல், விவிலியப் பகுதிகளை மனப்பாடம் செய்து ஒப்பித்தல், விவிலிய நாடகங்கள் நடித்தல் போன்ற போட்டிகளை நடத்துதல். விவிலியக் கண்காட்சிகள் அமைத்தல்.*
- *விவிலியத்தில் உள்ள நபர்கள், இடங்கள், நிகழ்வுகளைக் குறித்து விடுகதை தயாரித்தல்.*
- *கிராமியக் கலைகள் வழியாக (நடனம், கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், பட்டிமன்றம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு,*

கதாகாலட்சேபம்] விவிலிய நிகழ்ச்சிகளை வழங்குதல், விவிலியப் பாடல்களைப் [VBS] பயன்படுத்துதல்.

- விவிலியத் திரைப்படங்களைத் திரையிடுதல்.
- விவிலியக் குடும்பங்களின் பெயர்கள், இறைவார்த்தையில் வாழ்ந்த புனிதர்களின் படங்கள் திரையில் எழுதி அறியச் செய்தல்.
- விவிலியக் கதாபாத்திரங்களின் உடை அணிந்து ஆலயத்திற்கு வருதல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான விவிலியம் வழங்குதல். [எ.கா] பார்வையற்றோருக்கான புதிய ஏற்பாடு + திருப்பாடல்கள் உள்ளன. உங்கள் மறைமாவட்டச் செயலர்களைத் தொடர்பு கொண்டு திண்டிவனம், விவிலியப் பணிக்குழு மையத்தில் இருந்துப் பெற்றுக்கொள்ளவும்.
- இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் தனித்தனியாக விவிலிய முகாம்கள் நடத்துதல். பங்கை விட்டு வெளியே சென்றும் நடத்தலாம்.
- பேனா மற்றும் பரிசுப் பொருள்களில் இறைவார்த்தை Stickers ஒட்டுதல்.
- விவிலிய ஞாயிறன்று சிறப்பான திருப்பலிக் கொண்டாட்டம். நாள் முழுவதும் பல்வேறு போட்டிகள், அன்று மாலை விவிலியக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- திருப்பலியில் காணிக்கைப் பவனியின்போது ஏழைகளுக்காக விவிலியப் பிரதிகளைக் காணிக்கையாக அளித்தல்.
- மக்களின் பயன்பாட்டிற்காகக் கோவில்களில் திரு விவிலியங்களை வைத்தல்.
- விவிலிய வசனங்களுக்கு ஏற்ற படம் வரைந்து வசனத்தை எழுதுதல் [திராட்சைச் கொடி – கனிகள்]
- ஒவ்வொரு நாளும் வித்தியாசமான பவனி நடத்துதல். [உ.ம்]
- 1. விவிலியம் ஏந்தி வரல், 2. நற்செய்தியாளர்கள், 3. இறை வாக்கினர்கள் போல உடையணிந்து வரல், 4. பெண் இறை வாக்கினர், 5. விவிலியப் பணிக்குழு, 6. இளையோர், 7. பக்த சபை, 8. தாங்கள் விரும்பும் விவிலிய கதாபாத்திரமாக மாறுவேடம் அணிந்து வரல்.
- விவிலியம் தன் வரலாறு சொல்லுதல்.
- விவிலிய வாரம் முழுவதும் தனக்கு பிடித்த விவிலிய நபர்களின் பெயர்களை சூட்டிக் கொண்டு அவர்களைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவித்து மகிழ்தல்.
- பங்குகளில், வீடுகளில் விவிலியக் கட்டுரைகளைத் தாங்கி வரும் **[இனிய தோழன், விவிலிய விருந்து]** போன்ற

பத்திரிகை களுக்கு சந்தாதாரர்களாக சேர்ந்து அவைகளை வருவிப்பது. கட்டுரைகளை வீடுகளில், அன்பியங்களில் விவிலியக் குழுக்களில் வாசித்துப் பகிர்ந்து கொள்வது.

- விவிலியப் பணிக்குழு விவிலிய குழுமங்கள், விவிலிய நண்பர்கள், விவிலிய பணியாளர்கள், தன்னார்வப் பொது நிலையினர்கள் என்று மறைமாவட்ட மற்றும் பங்குத் தளங்களில் விவிலிய மேய்ப்புப் பணிக்கான அமைப்புகளை உருவாக்குவது.
- உருவாக்க நிகழ்வுகள் : விவிலியத்தைப் பற்றிய உரைகள், விவிலிய தலைப்புகளில் உரைகள், விவிலியச் செப வழிபாடுகள், விவிலியம் கற்கும் குழுக்கள், விவிலியப் பகிர்வுக் குழுக்கள், பங்கிலுள்ள சபைகள் மற்றும் குழுக்களுக்கான விவிலியக் கருத்தரங்கு (ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக் கிழமை, இளையோருக்கான விவிலிய முகாம்கள்.
- குடும்பத் தலைவர் அல்லது பங்குத் தந்தையின் தலைமையில் இல்லங்களில் விவிலியத்தை நிறுவுதல். குடும்ப செப வேளையிலும், குடும்பக் கொண்டாட்டங்களின் போதும் விவிலியம் வாசித்தல்.
- அக்கம் பக்கமுள்ள குடும்பங்களைச் சந்தித்து விவிலியம் வாசிக்க ஊக்கப்படுத்துவது மற்றும் அவர்களுடைய தேவைகளுக்காக அவர்களோடு இணைந்து செபிப்பது.
- விவிலிய வங்கி தொடங்குதல் : நபர்களிடமிருந்து நன்கொடை பெற்று அல்லது விவிலியப் பிரதிகள் பெற்று, விவிலியம் வாங்க வசதி இல்லாதவர்களுக்கு குறைந்த விலையில் அல்லது இலவசமாக வழங்குதல். ஆளுக்கொரு விவிலியம், நாளுக்கொரு அதிகாரம் என்ற இலக்கை அடைதல் வேண்டும்.
- பிறந்த நாள், புது நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம் மற்றும் ஜூபிலி கொண்டாட்டங்களின் போது விவிலியத்தை அன்பளிப்பாக வழங்குதல். பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து செல்லும் மாணாக்கருக்கு விவிலியத்தைப் பரிசாக வழங்குவது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் விவிலியம் கற்கும் குழுமங்களை உருவாக்குதல். சூழ்நிலைகளைப் பொறுத்து சிறைக் கைதிகளுக்கு விவிலியம் வழங்குதல்.
- பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு கோடை விடுமுறையில், விடுமுறை விவிலிய வகுப்புகள் நடத்தலாம்.
- விவிலியத்தின் புத்தகங்களுக்கு விளக்கவுரைகள், முகவுரை தொடர்கள் என இலக்கியங்களாக அச்சிடுதல், மாதாந்திர இதழ்கள், பிரசுரங்கள் என விவிலியத் தலைப்புகளில், விவிலியச் செய்திகளாக வெளியிடுதல், விவிலிய நாள்காட்டி, விவிலிய காலண்டர் போன்றவற்றை வழிபாட்டு வாசகங் களோடு வெளியிடுதல், முழு விவிலியத்தைப் பற்றி அல்லது விவிலியத்தில் உள்ள சில புத்தங்களைப் பற்றி எழுதுதல்.

- ***அஞ்சல் வழி விவிலிய படிப்புகள்*** *மற்றும் இணையவழி விவிலிய படிப்புகளில் பங்கெடுத்தல். தமிழக விவிலியப் பணிக்குழுவில் ஏற்கெனவே ஏராளமானோர் கலந்து பயன் பெறுகின்றனர். நீங்களும் பங்கு கொள்ளலாம். விவரங்களுக்கு: விவிலியப் பணிக்குழுச் செயலர், முப்பணி மையம் (TNBCLC), திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் – 604 001. அலைபேசி : 94 87 42 65 80.*
- *பள்ளி கூடுகையின்போது விவிலிய வாக்கியங்களை வாசித்தல். டிஜிட்டல் திரைகளில் விவிலிய வசனங்களைக் காட்டுவது. விவிலிய நாடகங்கள் மூலம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் விவிலியம் வாசிக்க ஆர்வத்தை ஏற்படுத்துவது.*
- *மதம் சார்ந்த மற்றும் மதம் சாரா பத்திரிகைகளில் விவிலியத் தலைப்புகளில் அல்லது விவிலியம் காட்டும் விழுமியங்களில் கட்டுரைகள் எழுதுவது.*
- *பங்குகளில் அல்லது மறைமாவட்டத்தில் விவிலிய நூலகம் அமைப்பது.*
- *கொடி ஏற்றி விவிலியக் கொண்டாட்டங்கள் / விழாக்கள் நடத்துவது. விவிலியத் தேர் பவனி, நற்செய்திப் பெருவிழா கொண்டாட்டம், கிராமபுற விவிலியப் பறைசாற்றல்.*
- *விவிலியம் காட்டும் விழுமியங்கள் மற்றும் தலைப்புகளில் பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும் தியானங்கள் வழங்குவது.*
- *இறைவார்த்தையை பறைசாற்றுவது தொடர்பான யுத்தி களோடு, வழிபாடு மற்றும் விவிலியம் பற்றிய அடிப்படை அறிவு கொண்ட வாசகர்களாக பொதுநிலையினருக்கு பயிற்சி அளிப்பது.*
- *வாட்ஸ் அப், பேஸ்புக், டுவிட்டர், யூடியூப், மின் குழுமம், இணைய தளம், தொலைக்காட்சி சானல்கள் போன்ற சமூகத் தொடர்புசாதனங்கள் மற்றும் சமூக தளங்களை பயன்படுத்துதல்.*

  *யூடியூப் சானல்கள் மற்றும் கத்தோலிக்கர் தொலைக்காட்சி சானல்கள் வழியாகவும் விவிலிய பகுதிகளைப் பற்றிய ஆடல், பாடல் போட்டிகளை நடத்துவது.*
- *முடிந்தவரை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விவிலியப் புத்தகமாக எடுத்து அன்பியங்களில் விவிலிய வினாடி வினா நடத்துதல். சிறிய பரிசுகள் அன்பியங்கள் சார்பாக வழங்குதல்.*
- *பங்குகளில் போட்டிகள் நடத்தி பரிசுகள் கொடுக்கும்போது இனி பொருள்களுக்குப் பதிலாக விவிலியம் சார்ந்த பத்திரிகை களை ஒரு வருட சந்தா, மூன்று வருட சந்தா, ஆயுள் சந்தா என்று ஏற்பாடு செய்து அதையே முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என வழங்குதல். எடுத்துக்காட்டாக,*

**‘இனிய தோழன் பத்திரிகை’**
**தோழன் ஆசிரியர்**
**முப்பணி மையம் (TNBCLC)**
**திண்டிவனம் - 604 001**
**விழுப்புரம் மாவட்டம்.**

| | | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா | - | ரூ. 150 |
| மூன்று வருட சந்தா | - | ரூ. 300 |
| ஐந்து வருட சந்தா | - | ரூ. 450 |
| ஆயுள் வருட சந்தா | - | ரூ. 1500 |

**இனிய தோழன், விவிலிய விருந்து போன்ற பத்திரிகைகளை கட்டாயம் பரிந்துரை செய்யுங்கள்.**

**தோழன் சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
**தோழன் டிரஸ்ட்,** TNBCLC,
53/A6 மரக்காணம் ரோடு, தபால் பெட்டி எண். 11
திண்டிவனம் – 604 001. அலைபேசி : 63 81 50 31 06
**காசோலை :** “THOZHAN TRUST” **(அல்லது)**

| | | |
|---|---|---|
| Bank | : | IOB |
| Branch | : | Tindivanam |
| A/C Name | : | Thozhan Trust |
| A/C No | : | 171002000000265 |
| IFSC Code | : | IOBA0001710 |

## பங்குகளில் விவிலியப் பணிக்குழு

### நோக்கம்

ஒவ்வொரு பங்கிலும் விவிலியப்பணிக்குழு உருவாக்குவது தேவை.

### எப்படி உருவாக்குவது?

பங்கில் இருக்கும் சபைகள், இயக்கங்கள், மறைக்கல்விப் பணிக்குழு, வழிபாட்டுப் பணிக்குழு, நற்செய்தி அறிவிப்புக்குழு இவைகளிலிருந்து ஒருவர் அல்லது இருவர் ( பெரிய பங்கு / சிறிய பங்கு இவைகளின் தன்மையைப் பொறுத்து ) பங்கு விவிலியப் பணிக்குழுவின் உறுப்பினராக இருப்பர்.

### விவிலியப் பணிக்குழுவின் பணிகள் என்ன?

1. விவிலியம் எல்லாருக்கும் கிடைக்க வழி செய்யதல்.
2. ஏழை மக்களுக்கு இலவசமாகவும், மலிவு விலையிலும் விவிலியம் வழங்க ஏற்பாடு செய்தல்
3. ஆளுக்கொரு விவிலியம் நாளுக்கொரு அதிகாரம்.
4. அன்பியக்கூட்டங்களில் விவிலியம் கொண்டு வந்து பயன்படுத்த வலியுறுத்தல்.
5. விவிலிய அறிவை வளர்க்கும் விதத்தில் விவிலியக் கருத்தரங்குகள் நடத்துதல்.
6. குழுவாரியாக பங்கு மக்கள் அனைவருக்கும் விவிலியப் பயிற்சி அளித்தல்.
7. கலைவழி இறைமொழி கற்பிக்க கலைநிகழ்ச்சிகளை தயாரித்தல்.
8. ஊடகங்கள் வழியாக விவிலிய விளக்கங்களும் நடத்துதல்.
9. விவிலியம் சார்ந்த விழாக்களைக் கொண்டாடுதல், விவிலிய ஞாயிறு, விவிலிய வாரம், விவிலிய மாதம் கொண்டாடுதல்.
10. விவிலிய ஆளுமைகளை நாடகமாக நடத்துதல் - அதற்காக தயாரித்தல்
11. விவிலிய நாட்குறிப்போடு, விவிலிய சுவரொட்டிகள் வழங்குதல்.

12. அஞ்சல் வழி விவிலியக் கல்வியை பங்கில் துவங்குதல், ஒழுங்குபடுத்துதல்.

13. அஞ்சல் வழி விவிலியம் கற்போரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

14. விவிலிய வினாடி - வினா நடத்துதல்.

15. ஆண்டிற்கு ஒருமுறை பங்கு அளவில் விவிலிய கண்காட்சி நடத்த ஏற்பாடு செய்தல்.

16. விவிலிய அறிவினை வளர்ப்பதோடு அதனை வாழ்வாக்க பயிற்சிகள் நடத்துதல்.

17. விடுமுறை விவிலியப் பள்ளி நடத்துதல்.

18. பங்குகளில் விவிலிய விளக்க புத்தகங்கள் வாங்கி விவிலிய குழுக்களுக்கு வினியோகித்தல்.

19. திருவழிபாட்டுக் குழுவோடு இணைந்து வாசக பயிற்சியளித்தல்.

20. விவிலிய காணிக்கை பவனி.

21. மற்றும் இக்கையேட்டில் உள்ள பல பரிந்துரைகளை தயவுசெய்து செயல்படுத்தவும்.



# திருவிவிலிய வாரம்
# 19-25 செப்டம்பர், 2022
## விவிலிய வாரத்தில் வரக்கூடிய வார நாள்களுக்கான (19-25) மையக்கருத்துகள், கொண்டாட்ட வழிமுறைகள், திருவழிபாட்டுக் குறிப்புகள்
## (வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப சிறப்பிக்கும் குழுக்களை மாற்றிக் கொள்க)

விவிலிய வாரத்தில் வரக்கூடிய வார நாள்களுக்கான மையக்கருத்துகள், கொண்டாட்ட வழிமுறைகள், சில திருவழிபாட்டுக் குறிப்புகள் ஆகியவற்றை வழங்கியுள்ளோம். சிறப்பிக்கும் குழுக்கள் மையக்கருத்துக்கு ஏற்ற வகையில் பல அர்த்தமுள்ள அடையாளங்களைச் சேர்க்கலாம். பொருத்தமான பாடல்களை முன்கூட்டியே தேர்வு செய்து கொள்க. மன்னிப்பு மன்றாட்டுகளை மையக்கருத்தோடு இணைந்து போகும் வகையில் சேர்த்துக் கொள்ளலாம். நற்கருணை விருந்திற்குப் பின் ஓர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம். அந்த உறுதிமொழியினையும் அந்தந்த நாளுக்குரிய மையக்கருத்தோடு இணைந்து எழுதி உரக்கச் சொல்வோம். மேலும் உங்கள் படைப்புத் திறன்களுக்கேற்றாற்போன்று திருப்பலிக் கொண்டாட்டத்தை பங்குத்தந்தை, வழிபாட்டுக்குழு, விவிலியப் பணிக்குழு ஆகியோர் இணைந்து திட்டமிட்டு செய்யவும். நன்றி.

## 19.09.2022 - திங்கள்

**மையக்கருத்து** : **இறைவார்த்தையால் ஒளியூட்டப்பெற்று குழந்தைகளை, சிறுவர்களை உள்ளடக்கி மாமன்றப் பாதையில் வழிநடப்போம்**

**சிறப்பிக்கும் குழு** : அனைத்துக் குழந்தை, சிறுவர் இயக்கங்கள்

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**முதல் வாசகம்** : சீராக் 3:1-16

**நற்செய்தி வாசகம்** : லூக் 18:15-17

**திருப்பலி முன்னுரை**

எளிய உள்ளத்தினர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியதே.

இயேசு சிறுவர்களை அன்பு செய்தார். இறையாட்சியில் மிக முக்கிய மானவர்களாக அவர்களை எண்ணினார். குழந்தைகளிடம், தலைக்கனமோ, கர்வமோ இருக்காது. 'நான்' 'தான்' என்ற அகந்தை கொள்ளமாட்டார்கள். வேற்றுமை பாராட்ட தெரியாது. பகைமை, வைராக்கியத்தோடு அவர்களால்

வாழ முடியாது. குழந்தைகள் பிறரை உயர்வாக எண்ணுபவர்கள், அடுத்தவரைச் சார்ந்து இருப்பவர்கள். அனைவரையும் நல்லவர்கள் என நம்புபவர்கள். கபடு, பகட்டு, மேட்டிமை இவைகளை கொண்டிராதவர்கள்; பாசத்துடன் பழகக் கூடியவர்கள். நேர்மறையான எண்ணங்களோடு மிளிர்பவர்கள். எழுதப்படா எழுத்துகளிலும், சொல்லப்படா சொற்களிலும் உள்ள அன்பின் மொத்த உருவங்கள். இத்தகு நற்பண்புகளால் அலங்கரிக்கப்பட்டு நம் கண்முன் தோன்றும் தேவதைகள். இவர்கள் கடவுளின் நகல், இறைவனின் நீட்சி, விளம்பரம் தேடா வைரங்கள். நம் அனைவரையும் சிந்திக்க வைக்கும் இவர்கள், நாம் படிக்க வேண்டிய பாடங்கள். இவர்களை பாராட்ட வேண்டும். கொண்டாட வேண்டும். ஏனெனில் இவர்களே இறையாட்சியின் மதிப்பீடுகளை தன்னகத்தே கொண்டுள்ளவர்கள். விவிலியம் இவர்களையே உயர்வாக பேசுகிறது. இறைவார்த்தையை வாழ்வாக்குபவர்கள் இவர்களே. இறையாட்சியின் சிறப்பான கருவிகளாம் இவர்களை எடுத்துக்கொண்டு மாமன்ற பாதையில் ஒருங்கிணைத்து வழிநடப்போம்.

**நிறைவு உறுதி மொழி :** நற்கருணை விருந்திற்குப்பின் குழந்தைகள், சிறுவர்களை எழுந்து நிற்கச் சொல்லி உறுதிமொழி ஒன்று எழுதி எல்லாரும் வாசிக்கச் செய்யவும். குழந்தைகளின் நல்ல பண்புகளை உள்ளடக்கியதாக இருக்கட்டும். அவர்களும் இறையாட்சியின் கருவிகள் என்ற மையத்தில் இந்த உறுதிமொழி அமையட்டும்.

**திருப்பலிக்குமுன்** விவிலிய விளையாட்டுகள், போட்டிகள் வைக்கவும். **திருப்பலிக்குப் பின்** கலைநிகழ்வுகள் ஏற்பாடு செய்யவும்.

## 20.09.2022 - செவ்வாய்

**மையக்கருத்து : இறைவார்த்தையால் ஒளியூட்டப்பெற்று பெற்றோர்கள் குடும்பங்களை வழிநடத்தவும் மாமன்ற பாதையில் வழிநடக்கவும்**

**சிறப்பிக்கும் குழு** : அனைத்துப் பெற்றோர்கள் - அருள்சகோதரிகள்

**மன்னிப்பு மன்றாட்டு :** சொந்தமாக செபிக்கவும்

**முதல் வாசகம்** : சீராக் 32:14-24

**நற்செய்தி வாசகம் :** லூக் 2:41-52

**திருப்பலி முன்னுரை**

இறை இயேசுவின் அன்பார்ந்த இறைமக்களே! கடவுளின் படைப்பில் மனிதர்கள் மாபெரும் சிறப்புக்குரியவர்கள். கடவுளின் சாயலே நமக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய ஆளுமை. இதைவிட மனிதர்களுக்கு உலகில் சிறந்தது எதுவுமில்லை. மனிதர்களிடம் பதிக்கப்பட்ட இந்த அழகு முத்திரையை அழுக்குபடாது, இறுதிவரைக் காப்பது பெற்றோர்களின் கடமையாகும். குழந்தை பெற்றவர்கள் எல்லாம் பெற்றோர்கள் ஆசிவிட முடியாது; பேறுகால வேதனை குழந்தை பிறப்பின் வலியாக இருக்கின்றது; இன்றைய சமூகத்தில் நம் குழந்தைகளைக் கடவுள் குழந்தைகளை உருவாக்க

பெற்றோர்கள் பல வலிகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். பல நேரங்களில் இந்த வலிகளே நம் பெற்றோர்கள் வலிமைகளாக மாறுகின்றன.

ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் இறையச்சம் குறையாது பார்த்துக் கொள்ள வேண்டியது நம் பெற்றோர்களின் கடமையாகும். இறையச்சமே குழந்தைகளை மனிதர்களாக உருவாக்கும்; மானிடப் பாதையில் சீர்படுத்தும். சமூகத்தின் பல்வேறு தாக்கங்களினால் சிதறுண்டு வாழும் நம் குழந்தைகளைப் பெற்றோர்கள் மீட்டுக்கொண்டு வந்து திரு அவையோடு இணைந்து ஒன்றாகப் பயணிப்போம். ஆண்டவரது வார்த்தைகளே இழந்த நமது சாயல்களைத் தேடட்டும்; ஆண்டவரது வார்த்தைகளே தொலைந்த நமது இறையச்சத்தைக் கண்டுபிடிக்கட்டும்; ஆண்டவரது வார்த்தைகளே நம்மைக் கூட்டிச் சேர்த்து திருப்பயணிகளாகட்டும். திருப்பலியில் ஒன்றாக இணைவோம்.

## நிறைவு உறுதி மொழி

நற்கருணை விருந்திற்குப் பின் பெற்றோர்கள் அனைவரும் எழுந்து நிற்கவும். அவர்களின் திறமைகள், ஆற்றல்கள், பொறுப்புகள் உள்ளடக்கியும் இறைவார்த்தையை குழந்தைகளின் உள்ளங்களில் பதிக்க வேண்டிய அவர்களின் கடமைகளையும் உள்ளடக்கி உறுதிமொழி எழுதி வாசிக்கச் செய்யவும்.

**திருப்பலிக்கு முன்** பெற்றோர்களுக்கு விவிலிய விளையாட்டுகள் / போட்டிகள் வைக்கவும். கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து **திருப்பலிக்குப் பின்** நடத்தவும்.

## 21.09.2022 - புதன்

**மையக்கருத்து** : **இளையோர் எல்லாரும் இறைவார்த்தையால் சீராக்கப்பட்டு மாமன்றப் பாதையில் வழிநடக்க...**

**சிறப்பிக்கும் குழு** : பங்கின் அனைத்து இளையோர்

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**முதல் வாசகம்** : யாக் 1:19-35

**நற்செய்தி வாசகம்** : லூக் 24:13-32

**திருப்பலி முன்னுரை**

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, நமது திருத்தந்தையின் அழைப்பிற்கிணங்கி, நமது பங்கு, மறைவட்டம், மறைமாவட்டம் ஆகிய தளங்களில் இணைந்து பயணிக்கும் செயல்முறையால் மாமன்ற பாதையில் நமது பொறுப்புணர்ந்து பங்கேற்றோம். இச்செயல்முறையில் இறைவனின் இப்பொழுதாகிய ஆண், பெண் இளைஞர்கள் ஈடுபடவும் அவர்களது குரல்கள் ஓங்கி ஒலிக்கவும் தமிழ்நாடு திரு அவையில் இளைஞர்களுக்கென்று மாமன்றம் நடத்துவதற்கான செயல்பாடுகள் நமது பங்குகளில் நடந்தேறிக் கொண்டிருப்பது நாமறிந்ததே.

நுகர்வு வெறி உருவாக்கும் பொருட்குவிப்பு, உலகமயம் உருவாக்கியுள்ள தனிமனித போக்கு, தகவல் தொடர்பு ஊடகங்கள் உருவாக்கியுள்ள போதை, தொடர்பற்ற நிலை, பொய்களை உண்மையென நம்பி ஏற்பது, வெள்ளித்திரை நடிகர்களது நடிப்பு, மது, புகை, போதை மருந்துகள், ஊசிகள் ஆகியன உருவாக்கும் மயக்குறு நிலை போன்றவை இன்றைய இளைஞர்களது தான்மையைச் சிதைக்கின்றன. தங்களது வாழ்வு பற்றிய தெளிவின்மை, பெற்றோர்களாலும் மூத்தோர்களாலும் புறக்கணிப்பு, வேலையின்மை ஆகியன இளைஞர்களை மேன்மேலும் வீழ்த்துகின்றன. இங்ஙனம் தளர்ந்து போய், விரக்திக்குள்ளாகி, சோர்ந்துள்ள ஆண், பெண் இளைஞர்களது வாழ்வைச் சீராக்க, ஒழுங்குபடுத்த இறைவார்த்தை ஆற்றல் வாய்ந்ததாய் செயலாற்றுகின்றது. எனவேதான் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், "இளைஞர்களே! திருவிவிலியத்தை ஏந்துங்கள். அது உங்கள் வாழ்வுக்குத் திசைகாட்டும் கருவியாகத் திகழட்டும்", என அறைகூல் விடுத்தார்.

இறைவார்த்தை பகிரப்படும் திருப்பலிகளில் மட்டுமல்ல, அன்பியக் கூட்டங்களிலும் முழுமையாகப் பங்கெடுப்பவர்களாகத் திகழ இளைஞர்கள் அழைக்கப்படுகின்றனர். இந்த நம்பிக்கைப் பயணத்தில், மூத்தோர்கள், மாமன்ற பாதையில் தாங்கள் ஆழ்ந்து அனுபவித்த, குரலற்றவர்களின் குரலும் ஓங்கி ஒலிக்கச் செய்த இணைந்து பயணிக்கும் செயல்முறை வாயிலாக அவர்களுக்கு நம்பிக்கை அளிக்க அவர்களை வரவேற்போம். எம்மாவு சென்ற சீடர்களோடு உடன் பயணித்த உயிர்த்த இளைஞர் இயேசு நம் வழியாக அவர்களோடு பயணிக்கிறார் என்ற தெளிவைப் பெறுவோம். சீடர்களது கேள்விகளுக்குத் தெளிவை வழங்கி, தளர்ந்திருந்த அவர்களை உறுதிப்படுத்தி, துணிவுடன் செயல்படச் செய்த அவரது வழியைப் பின்பற்றி, நமது இளைஞர்கள் இயக்கங்களில் இணைந்து இயங்கச் செய்வோம். அவர்கள் திறன்மிகு உணர்வால் திரு அவையையும் உலகையும் புதுப்பிக்க இத்திருப்பலியில் அவர்களுக்காக இறைவேண்டல் புரிவோம். 'நாம் அனைவரும் திரு அவையாகிய ஒரே படகில் ஏறி, தூய ஆவியாரின் புதுப்பிக்கும் இயக்க ஆற்றலால் இணைந்தே ஒரு சிறந்த உலகத்தை தேடுவோமாக' என்ற திருத்தந்தையின் அழைப்பினை ஏற்று, இளைஞர்கள் இறைவார்த்தையால் சீராக்கப்படவும் அவர்கள் மாமன்ற பாதையில் பயணிக்கவும் இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**நிறைவு உறுதி மொழி :** நற்கருணை விருந்திற்குப்பின் இளையோர் அனைவரையும் எழுந்து நிற்கச் சொல்லி உறுதிமொழி ஒன்று எழுதி எல்லாரும் வாசிக்கச் செய்யவும். இளையோர்களின் பொறுப்புணர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கட்டும். அவர்கள் இறையாட்சியின் கருவிகள் என்ற மையத்தில் இந்த உறுதிமொழி அமையட்டும்.

**திருப்பலிக்குமுன்** விவிலிய விளையாட்டுகள், போட்டிகள் வைக்கவும். **திருப்பலிக்குப் பின்** கலைநிகழ்வுகள் ஏற்பாடு செய்யவும்.

## 22.09.2022 - வியாழன்

**மையக்கருத்து** : **நம் அனைத்து இறைபணிகளும் இறை வார்த்தையால் தூண்டடப்பட்டு மாமன்றப் பாதைக்கு கொண்டு செல்ல...**

**சிறப்பிக்கும் குழு** : பங்கின் அனைத்து திருத்தூது கழகங்கள்

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**முதல் வாசகம்** : 1திமொ 3:8-13

**நற்செய்தி வாசகம்** : மாற் 10:35-45

**திருப்பலி முன்னுரை**

அன்பான சகோதர சகோதரிகளே இயேசுவின் இனிய திருப்பெயரால் உங்களுக்கு வாழ்த்துக்கள்!

திருத்தூது கழகங்களில் தங்களையே அர்ப்பணித்திருக்கிற அனைத்து பொதுநிலையினருக்கும் சிறப்பான வாழ்த்துக்கள். எப்பொழுதுமே நாம் இயேசுவின் இதயத்தை அணிந்து வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த இயேசுவினுடைய இதயம் தான் மக்கள் மத்தியிலே பணியாற்ற நம்மைத் தூண்டுகிறது. பதவி மோகம் பிடித்துக் கொண்டிருக்க கூடிய இந்த காலக் கட்டத்தில் நாம் அனைவருமே திருத்தூது கழகங்களில் சேர்ந்தது பணியாற்றத்தான் என்கிற ஓர் அழைப்பை நற்செய்தி வாசகம் உறுதிப்படுத்துகிறது. இன்றைய முதல் வாசகமும் மிகத் தெளிவாக நம்முடைய குணநலன்கள் எப்படி அமைய வேண்டும் என்பதை காட்டுகிறது. இறைவார்த்தை நம் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருக்கிறது (திருப்பால் 119:105) சொல்வதுபோல ஆண்டவருடைய வார்த்தை என் காலடிக்கு விளக்கு; அதுவே நம் பாதைக்கு ஒளியும் ஆகும். எனவே இறைவன் காட்டும் பாதையில் நடந்து நல்ல பணியாளர்களாய் இந்த குறுகிய கால வாழ்க்கையில் வாழ்ந்து இயேசுவின் இதயத்தில் இடம் பிடிக்கும் பொதுநிலையினராய் வலம்வர இந்த திருப்பலி வழியாக மன்றாடுவோம். திருப்பாடல் கூறும் நல்ல பண்புகளால் ஒளியூட்டப் பெற்று, நமது வேறுபாடுகளைக் களைந்து மாமன்றப் பாதையில் ஒன்றாக வழிநடப்போம்.

**நிறைவு உறுதி மொழி**

நற்கருணை விருந்திற்குப் பின் திருத்தூதுக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நிற்கவும். அவர்களின் திறமைகள், ஆற்றல்கள், பொறுப்புகள் உள்ளடக்கியும் இறைவார்த்தையை குழந்தைகளின் உள்ளங்களில் பதிக்க வேண்டிய அவர்களின் கடமைகளையும் உள்ளடக்கி உறுதிமொழி எழுதி வாசிக்கச் செய்யவும்.

**திருப்பலிக்கு முன்** இவர்களுக்கு விவிலிய விளையாட்டுகள் / போட்டிகள் வைக்கவும். கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து **திருப்பலிக்குப் பின்** நடத்தவும்.

## 23.09.2022 - வெள்ளி

**மையக்கருத்து** : **அருள்பணியாளர்கள், இருபால் துறவியர்கள், வேதியர்கள், திருப்பணி உதவியாளர்கள் அனைவரும் இறைவார்த்தையில் ஒளியூட்டப் பெற்று மாமன்றப் பாதையில் பயணிக்க...**

**சிறப்பிக்கும் குழு** : அருள்பணியாளர்கள், இருபால் துறவியர்கள், வேதியர்கள், திருப்பணி உதவியாளர்கள்

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**முதல் வாசகம்** : 1 கொரி 12:12-14, 27

**நற்செய்தி வாசகம்** : மத் 13:33

**திருப்பலி முன்னுரை**

இறை இயேசுவின் இனியவர்களே! அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

இயேசுவின் கனவு இறையாட்சி என்பதே (மாற் 1:14, 15). இந்த இறையாட்சியை என்றும் எங்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று இயேசு பணி செய்தார். சீடர் குழுக்களை உருவாக்கினார்; திருத்தூதர்களை உலகெங்கும் அனுப்பினார் (மத் 28:19). எல்லா மக்களையும் ஒன்றிணைக்கும் 'அதிகாரம்' கொடுத்து அனுப்பினார். இந்த அதிகாரம் ஒரு புதிய ஆளுமையே தவிர, ஆணவம் அல்ல. இயேசுவின் இறையாட்சி கனவு, கருத்து எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதால் பணிக்கட்டளைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுவின் இந்தப் பணிக் கட்டளையினை உலகெங்கும் செயல்படுத்துவது திருப்பணியாளர்களின் கடமையாகும். இதைச் செய்யாமலிருப்பதோ, செய்வதற்குத் தடையாக இருப்பதோ இறைவன் முன் நிகழும் மாபெரும் குற்றமாகும்.

இயேசுவின் பணியை நிறைவேற்றும் ஒவ்வொரு நிலையிலும் திரு அவையின் ஒவ்வோர் உறுப்பினரோடும் இணைந்துப் பணிபுரிவதும் பயணிப்பதும் இயேசு தந்த வாழ்வுப் பாணி. இதையும் நாம் செய்யாமல் இருப்பதோ, செய்யத் தடையாக இருப்பதோ இறைவனின் முன் நிகழும் மாபெரும் குற்றமாகும். ஆகையால் திரு அவையில் அனைத்து உறுப்பினர் களோடும் ஒன்றித்துப் பயணிப்போம். மாமன்றப் பாதையில் எல்லா மக்களையும் இணைத்து வழிநடக்க அருள்வேண்டி திருப்பலியில் பங்கேற்போம்.

**நிறைவு உறுதி மொழி** : நற்கருணை விருந்திற்குப்பின் அருள்பணியாளர்கள், இருபால் துறவியர்கள் வேதியர்கள் எல்லாரும் எழுந்து நின்று ஒவ்வொருவரும் தம்தம் பொறுப்பினை உணர்ந்து எழுதி, எழுந்து வாசிக்கவும்.

முடிந்தால், **திருப்பலிக்குமுன்** விவிலிய விளையாட்டுகள், போட்டிகள் வைக்கவும். **திருப்பலிக்குப் பின்** கலைநிகழ்வுகள் ஏற்பாடு செய்யவும்.

## 25.09.2021 - சனி

**மையக்கருத்து** : **இறைவார்த்தையால் ஒளியூட்டப்பெற்று அனைத்து அன்பியங்களும் இணைந்து மாமன்றப் பாதையில் வழிநடக்க...**

**சிறப்பிக்கும் குழு** : அன்பியங்கள் - ஒருங்கிணைப்பு

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**முதல் வாசகம்** : உரோ 12:9-19

**நற்செய்தி வாசகம்** : யோவா 17:20-23

**திருப்பலி முன்னுரை**

இறை இயேசுவில் இனியவர்களே! அன்பார்ந்த வணக்கங்கள். அன்பியங்கள் - திரு அவையின் புதிய வடிவங்கள். திரு அவை - இனி அன்பால் மட்டும் இயங்க முடியும். இயேசு கொணர்ந்த இந்த அன்பை ஓர் இயக்கமாக மாற்றும் சக்தி நமது அன்பியங்களுக்கு உண்டு. எனவே முதல் கிறிஸ்தவ வாழ்க்கையில் எல்லா மக்களும் எல்லா எல்லைகளையும் தொல்லைகளையும் தாண்டி ஒன்றாகக் கூடி செபித்து, உரையாடி, உறவாடி, அப்பங்களைப் பிட்டுப் பகிர்ந்து கொண்ட அந்த மாபெரும் வாழ்வு முறையே திரு அவையின் இறையாட்சிக் கனவு. இந்த கனவை நனவாக்குவதற்கு இறைவன் கொடுத்தச் செயல் வடிவக் கொடைகளே இந்த அன்பியங்கள். இதனைப் புரிந்துகொள்வோம்; ஒவ்வொரு நாளும் தொடர்ந்து அனுபவிப்போம்.

இறைவார்த்தையே - இயேசுவின் வாழ்வே அன்பிய வாழ்வின் மையம். இந்த இறைவார்த்தை ஒவ்வொரு நாளும் நம்மை அன்பிய வாழ்விற்கு உந்தித்தள்ள வேண்டும். நாமும் இறைவார்த்தையை 'ஒரே ஆளென' (நெகெ 8:1) செவிமடுக்க வேண்டும். தற்காலத் திரு அவை நாம் எல்லாரும் 'ஒரே ஆளென' பயணிக்க வேண்டும் என்று நம்மைப் பணிக்கிறது. திரு அவையில் ஒன்றாகப் பயணிக்க நம்மை ஒளியூட்டுவது இறைவார்த்தை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதரையும் தொட்டு, தூக்கி, சரிபார்த்து, சீர்படுத்தி, ஒளியூட்டி வளர்க்கும் ஆற்றல் இறைவார்த்தைக்கே உண்டு. மாமன்றப் பாதையில் ஒன்றாகப் பயணிக்க இறைவார்த்தையால் ஒளியூட்டம் பெறுவோம். இணைக்கும் சக்திகளாக இறைவார்த்தையை அனுபவிப்போம்.

### நிறைவு உறுதி மொழி

நற்கருணை விருந்திற்குப் பின் அன்பிய ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நிற்கவும். அவர்களின் திறமைகள், ஆற்றல்கள், பொறுப்புகள் உள்ளடக்கி உறுதிமொழி எழுதி வாசிக்கச் செய்யவும்.

**திருப்பலிக்கு முன்** அன்பிய ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களுக்கு விவிலிய விளையாட்டுகள் / போட்டிகள் வைக்கவும். கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து **திருப்பலிக்குப் பின்** நடத்தவும்.

# விவிலிய ஞாயிறு
# 25.09.2022
# சிறப்புத் திருப்பலி

**மையக்கருத்து:**

**இறைவார்த்தையால் ஒளியூட்டப் பெற்று மாமன்றப் பாதையில். . .**

*(குறிப்பு : முடிந்தவரை தேதி மாற்றம் இன்றி கொண்டாடுவோம். மிகமிகச் சிறப்பாகத் திட்டமிடவும். கொண்டாடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் பல பரிந்துரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தயவுசெய்து முன் கூட்டியே வாசித்துப் பயன்படுத்தவும்).*

## தயாரிப்புக்கு உதவியாகச் சில பரிந்துரைகள்

*அ. பங்கின் விவியிலியப் பணிக்குழு, திருவழிபாட்டுப் பணிக்குழு மற்றும் இளைஞர் குழுக்களை உள்ளடக்கிய விவிலிய நிகழ்வுகள், விவிலிய வார்த்தைகள், விவிலிய குறிப்புகள் அடங்கிய படங்களால், வண்ணங்களால் ஆலயம் மற்றும் சுற்றுப்புறங்களை அழகுபடுத்திடுக.*

*ஆ. திருப்பலிக்கு முன் சிறப்பான திருவிவிலியப் பவனி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திடுக.*

*இ. சலுகை விலையில் விவிலியப் பிரதிகள் வழங்க ஆவன செய்திடுக.*

*ஈ. விவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கைக்கு நினைவூட்டிடுக.*

*உ. எல்லாரும் பாடி, திருப்பலியில் பங்கேற்கும் வண்ணம் பாடல்களைத் தேர்வு செய்திடுக.*

*ஊ. விவிலிய வார நிறைவுக் கொண்டாட்டத்தை மக்கள் பெருமளவில் பங்கேற்கும் வண்ணம் தயாரித்து நடத்திடுக.*

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் இனியவர்களே!

அன்பார்ந்த வணக்கங்கள். வாழ்வுக்கான வாழ்த்துகள். என்றும் இல்லாத அளவு இன்றைய இப்போதைய உலகில் மனிதர்களுக்கு மன

அழுத்தங்கள், மனப்பாரங்கள் அதிகம்!? இத்தனைக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் ஆயிரம்!? எங்கேயோ சறுக்கல் உள்ளது; எங்கேயோ பிழை இருக்கிறது. ஒவ்வொரு நாடும் சமூகமும் குடும்பமும் நிறுவனமும் தங்களையேத் தட்டிப்பார்த்துக் கேள்விகேட்க வேண்டும். இலக்கு இல்லாமல் பயணம் செய்கின்றோமா? அல்லது இறைவன் இல்லாமல் பயணம் செய்கின்றோமா? இன்றைய உலகில் நம்மவர்களுக்கு இலக்கும் இல்லை, இறைவனும் இல்லை.

நாம் தொலைத்துவிட்ட ஆனால், நம்மைத் தொலைத்துவிடாத இறைவனைத் தேடுவோம். இறைவார்த்தையில் முழுமையாக பிரசன்னமாயிருந்து உடன் வாழும் உடன் பயணிக்கும் இறைவனைத் தேடுவோம். இறைவார்த்தையில் இறைவனின் முழுமையான பிரசன்னம் உள்ளது. அந்த இறைவார்த்தையை நமது வாழ்வில் மையப்படுத்தி நமது ஒருங்கிணைந்த வாழ்வைத் தேடுவோம். சின்னாப்பின்னமாகிச் சிதறிப்போன நமது வாழ்வைத் தேடுவோம். இறைவார்த்தையில் இறைவனையும் நம் வாழ்வையும் கண்டடைய இளைய தலைமுறைதனை இழுத்து வருவோம். வீதியெங்கும் சாதிகள் பேசுவதைவிட, இறைவார்த்தைகளைப் பேசுவோம். மகிழ்வாய் இந்த நாள்களைக் கொண்டாட வாழ்த்துகின்றோம்.

*(இன்று 25.09.2022 தேவைப்படும் திருக்குழும மன்றாட்டு, காணிக்கை மீது மன்றாட்டு, நன்றி மன்றாட்டு ஆகியவற்றைத் திருப்பலிப் புத்தகத்தில் பொதுக்காலம் 26ஆம் ஞாயிறுக்கு உரிய பகுதியைப் பயன்படுத்தலாம். இல்லையேல் இம்மடலில் உள்ள மன்றாட்டுகளைப் பயன்படுத்தவும்).*

## வருகைப் பாடல்

### பொருத்தமான திருவிவிலியப் பவனி பாடல்

*(கோவில் முகப்பிலிருந்து திருவிவிலியத்தைப் பவனியாக எடுத்து வரலாம். பவனி திருவிவிலியத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் விதத்தில் அமைவது சிறப்புரிக்குரியது. அப்போது பாடப்படும் பாடலை எல்லாரும் பாடும் விதத்தில் முன் தயாரிப்புச் செய்து கொள்வது நல்லது. பவனிப் பாடலாகத் தேர்வு செய்து பாடவும். பவனி பீடத்தை அடைந்ததும். . . விவிலியத்தை அலங்கரிக்கப்பட்ட இடத்தில் வைக்கவும்).*

## விவிலிய அரங்கேற்றம்

*(3 பேர் பின்வரும் இறைவார்த்தைகளை உரக்கச் சொல்லவும்)*

1. *“உன் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன: என் உள்ளத்திற்கு உவகை அளித்தன. ஏனெனில் படைகளின் ஆண்டவரே, உம் பெயரே எனக்கு வழங்கலாயிற்று” (எரே 15:16) என்று முழங்குவார் இறைவாக்கினர் எரேமியா.*

2. *நற்பேறு பெற்றவர் யார்? அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர் பாவிகளின் தீய வழி நில்லாதவர்; இகழ்வாரின் குழுவினில் அமராதவர் (திபா 1:1).*
3. *ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின; அவரது சொல்லின் ஆற்றலால் வான்கோள்கள் எல்லாம் உருவாயின. அனைத்துலகும் ஆண்டவருக்கு அஞ்சுவதாக; உலகில் வாழ்வோர் அனைவரும் அவருக்கு அஞ்சி நடுங்குவராக (திபா 33:6, 8)*

## விவிலிய அஞ்சலி

*(தீப, தூப, மலர் அஞ்சலி + பொருத்தமான பாடல்)*

## விவிலிய அஞ்சலிக்குப்பின்

தொன்மைமிகு பாரம்பரியத்தின்படி திரு அவை நம் ஆண்டவரின் திருவுடலுக்கு வணக்கம் செலுத்துவது போலவே இறைவார்த்தைக்கும் என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது. ஆகவே இப்போது நாம் இறைவார்த்தைக்கு நமது மரியாதையைக் காட்டும் வண்ணம் சிரம் தாழ்த்தி கரம் குவித்து வணங்குவோம்.

## திருப்பலி தொடக்கம்

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

## மனத்துயர் மன்றாட்டு (சொந்தமாகச் செய்யவும்)

**உன்னதங்களிலே கடவுளுக்கு. . .**

## திருக்குழும மன்றாட்டு

என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா! வார்த்தை மனுவுருவாகி எங்களிடையே குடிகொண்டார் என்பதை உமது திருமகனின் பிறப்பின் மூலம் அறிவித்தீரே! அவரது வார்த்தைகள் இவ்வுலக மக்களை சாவிலிருந்து வாழ்வுக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், அறியாமை யிலிருந்து அறிவுக்கும் கடத்திச் சென்றதை நினைத்து மகிழ்கின்றோம். எங்கள் இறைவார்த்தைப் பணியிலும் உம் திருமகனின் பணிகள் முழுமையாகிட அருள்புரிவீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## வார்த்தை வழிபாடு

**முதல் வாசக முன்னுரை: நெகெ 8:2-10**

வலிகளைக் கொடுத்து யூத வரலாற்றைப் புரட்டிபோட்ட ஒரு வேதனையான நிகழ்வு பாபிலோனியாவிற்கு யூதர்கள் நாடுகடத்தப்பட்டது. மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பியவர்கள் உடலளவிலும் மனதளவிலும் சிந்தி சிதறிக்கிடந்தனர். நாட்டின் ஆளுமையும் தனிப்பட்ட ஆளுமையும் வலுவிழந்து காணப்பட்டது. இந்த நிலையில் வாசிக்கப்பட்ட இறை வார்த்தையே நொறுங்கிப் போன அந்த மனிதர்களுக்கு மீண்டும் உருக்கொடுத்து, உயிர்கொடுத்து, ஒன்று சேர்த்தது என்பதை இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கக் கேட்போம்.

**பதிலுரைப் பாடல்: திருப்பாடல் 19:8, 9,10**

(இதனைப் பாடிச் செபிக்கலாம்)

**பதிலுரை : ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன.**

ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை; அவை கண்களை ஒளிர்விக்கின்றன.

**பதிலுரை : ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன.**

ஆண்டவரைப் பற்றிய அச்சம் தூயது; அது எந்நாளும் நிலைத்திருக்கும். ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை; அவை முற்றிலும் நீதியானவை.

**பதிலுரை : ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன.**

அவை பொன்னினும், பசும் பொன்னினும் மேலாக விலைமிக்கவை; தேனினும், தேனடையினின்று சிந்தும் தெளி தேனினும் இனிமையானவை.

**பதிலுரை : ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன.**

**இரண்டாம் வாசக முன்னுரை: 1 கொரி 12:12-31**

கொரிந்திய குழுமம் பல்வேறு வகையான உட்பூசல்களால் சிதறிக் கிடந்தது. இறைவன் கொடுத்த வரங்களே பிரிக்கும் வரப்புகளாயின; இறைவன் கொடுத்தக் கொடைகளே பிரிக்கும் தடைகளாயின. இப்படிப்பட்ட கொரிந்திய குழுமத்திற்கு இறைவார்த்தையே ஒன்றிக்கும் சக்தி என்பதை உடல் - உறுப்புகள் உவமேயம் மூலம் புனித பவுலடியார் விளக்குவதை வாசிக்கக் கேட்போம்.

**வாழ்த்தொலி**

**அல்லேலூயா**

அல்லேலூயா (3)! "ஆண்டவரின் வாக்கு நேர்மையானது; அவருடைய செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை" அல்லேலூயா (3).

**நற்செய்தி வாசகம் : லூக் 4:14-21**

## மறையுரைக் குறிப்புகள்

**வாசகப் பின்னணி**

- கி.மு. 586ஆம் ஆண்டுகளில் யூதமக்கள் பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டார்கள். இஸ்ரயேல் வரலாற்றில் மனதில் பதிந்துவிட்டு ஒரு நிகழ்வு; ஓர் அடிமட்ட, அடிபட்ட வரலாற்று நிகழ்வு, வலிமையான ஒரு தாவீது அரசாட்சிக்கு நேர்ந்த ஒரு வலியான நிகழ்வு. எனவேதான் மத்தேயு நற்செய்தியாளர் இயேசு பற்றிய தலைமுறை அட்டவணையில் இதைக் குறிப்பிடத்தவறவில்லை (மத் 1:11, 17).
- யூதவரலாறே இந்த பாலஸ்தீன அடிமைத்தனத்தை வைத்து முன் / பின் என்றாகிவிட்டது.
- கி.மு. 535ஆம் ஆண்டு சைரஸ் என்ற பாரசீக மன்னரால் நாட்டிற்கு திருப்பி அனுப்பட்டனர்.
- செருபாபேல், எஸ்ரா, நெகெமியா, ஆளுமைகளின் கீழ் இடிந்த ஆலயத்தை மீண்டும் கூட்டத் தொடங்கினர். ஆலயம், மதில் சுவர் மட்டுமல்ல, இழந்த இஸ்ரயேல் ஆளுமையையே திருப்பிக் கட்டத் தொடங்கினர்; இழந்த இறைவனையும் இறை நம்பிக்கையையும் கண்டு பிடிக்கத் தொடங்கினர். இறைவார்த்தையே இம்மக்களை ஒன்றிணைக்கும் மாபெரும் சக்தி, ஆற்றல் என்பதை உணர்ந்தனர்.
- குரு எஸ்ரா தலைமையில் இறைவார்த்தை வாசிக்கப்பட்டது. பிரிந்திருந்த இரும்பு இதயங்களை இறைவார்த்தைக் காந்தமாய் இழுத்தது. யாவே இறைவனையே நிலைகுத்தி மக்கள் நின்றனர்.
- மக்கள் அனைவரும் ஒரே 'ஆளெனக்' கூடுகிறார்கள் (நெகெ 8:1).
- திருநூலைத் திறந்த போது எல்லா மக்களும் எழுந்து நின்றார்கள். (நெகெ 8:5); எல்லா மக்களும் ஆண்டவராகிய கடவுளை வாழ்த்தினர் (8:6); எல்லா மக்களும் கைகளை உயர்த்தி 'ஆமென், ஆமென்' என்று பதிலுரைத்தனர் (8:6); எல்லா மக்களுக்கும் பணிந்து முகங்குப்புற விழுந்து ஆண்டவரைத் தொழுதார்கள் (8:6).
- எழுந்து நின்றதால் அவர்கள் இறைவார்த்தையைக் கேட்க, செவிமடுக்கத் தயார் என்றனர்.

- பணிந்து வணங்கியதால் திருநூலுக்கு - இறைவார்த்தைக்கு முழுவதுமாக தங்களையே வணங்கி அர்ப்பணித்தனர்.

- புரிந்து கொண்டதால் (8:8) தங்களின் உய்த்துணரும் தன்மையை வெளிப்படுத்தினர்.

- அழுது கொண்டதால் (8:9) தங்களின் கடந்த கால வாழ்வை, பாவங்களை, குற்றங்களை, யாவே இறைவனை மறந்ததை நினைவு கூர்ந்தனர்.

- இச்சூழலில் சோர்வுற்று, சிதைவுற்றுக் கிடந்த அந்த மக்களையெல்லாம் இறைவார்த்தையே ஒன்று சேர்ந்தது. பாவங்களும் பலவீனங்களும் உறிஞ்சி எடுத்த பலத்தை மீண்டும் தந்தது. சோகங்கள் மறந்து கொண்டாடச் செய்தது (8:10).

- இறைவனை - இறைவார்த்தையை - வாழ்வை மறந்த மக்களை மீண்டும் ஒன்று சேர்த்ததும், கட்டிப்போட்டதும் இறைவார்த்தையே.

- அன்று இஸ்ரயேல் மக்களின் பாதையை ஒளியூட்டிய இறைவார்த்தை இன்று நமது மனிதப் பாதைகளையும் மாமன்றப் பாதைகளையும் ஒன்று கூட்டட்டும்.

- இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடியார் உடல், உறுப்புகள் உவமேயம் மூலம் கொரிந்திய குழுமத்திற்கு அறிவுரைகள் வழங்குகிறார். ஒவ்வொருவருக்கும் இறைவன் தனிப்பட்ட வரங்களையும் கொடைகளையும் கொடுத்ததால் அதையே இறைச்சமூகம், மனிதச்சமூகம் கட்டியெழுப்பப் பயன்படுத்துவோம். பலவீனமான உறுப்புகள் என்று நாம் கருதுவதே பல நேரங்களில் இன்றியமையாத உறுப்புகளாகும். அமைப்பும், தோற்றமும், வடிவமும் மட்டும் உறுப்புகளின் மாண்பையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதில்லை. ஒவ்வோர் உறுப்பும், ஒவ்வொரு மனிதரும் மாண்புக்குரியவர்களே. மாமன்றப் பாதையில் வழிநடக்கும் நமக்கு, மாமன்றம் வழிகாட்டும் ஒன்றிப்பு என்ற கருத்துக்கு இது மாபெரும் அடிப்படையாகும்.

- நற்செய்தி வாசகம் நாம் கொள்ள வேண்டிய பணி இலக்கு - மறைத் தூதுப் பணி பற்றி உரைக்கிறது. ஆண்டவர் இயேசுவின் இலக்கே (மாற் 1:14-15; லூக் 4:8-19) இறையாட்சி. இந்த இறையாட்சி இலக்கு என்ன என்பதை நற்செய்தியில் தெளிவாக அட்டவணையிடுகிறார். இந்த இறையாட்சி இலக்கை அடைவதற்குத் தான் மாமன்றம் நமக்கு வழிகாட்ட வேண்டும்.

- பிரிந்தவர் சேரவும், சேர்ந்தவர் கொண்டாடவும், கொண்டாடியவர் ஒன்றிக்கவும், ஒன்றித்தவர் நடைபயணிக்கவும் இறைவார்த்தையே வலுவூட்டட்டும். இதுவே மாமன்ற நடைபாதை.

- இப்படிப்பட்ட இறைவார்த்தைகளும் இறைச்சிந்தனைகளும் மாமன்ற பாதையில் நம்மை வழிநடத்தட்டும்.

## இறைமக்கள் மன்றாட்டுகள்

**பதிலுரை :** *அருள்கூர்ந்து, அருள்கூர்ந்து ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

**1. திரு அவையின் பாதுகாவலரே இறைவா!**

உடைபட்டு, வலுவிழந்த உலகிற்கு திரு அவை உமது ஆற்றல் மிகுந்த இறைவார்த்தையை எடுத்துரைக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகின்றோம். உம் திருமகன் இயேசுவை உள்ளார்ந்த நேர்மையோடும் உண்மையோடும் எடுத்துரைக்கவும், அவரையே முழுமையாகப் பிரதிபலித்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. வாழ்வுதருகின்ற வல்லவரே இறைவா!**

விவிலிய மறைப்பணி செய்கின்ற எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினருக்காக வேண்டுகின்றோம். இவர்கள் செய்கின்ற பணியில் இறை வார்த்தையின் வலிமை துன்புற்றோருக்கு ஆறுதலாகவும், துவண்டு கிடப்போருக்கு ஆற்றலாகவும் மாறிட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**3. நலன்களுக்கெல்லாம் நல்ல தந்தையே இறைவா!**

இன்றைய உலகின் அதிதீவிர நாகரீகப் போக்கு, வளர்ச்சி என்ற பெயரில் வரும் வீக்கங்கள் அது ஏற்படுத்தும் காயங்கள் இவைகள் இன்றைய உலகின் போலி எதார்த்தங்கள். தடம்புரண்ட எங்கள் இளையோர்கள் தங்கள் ஆளுமைக்கெதிரான பண்புகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் எல்லாரையும் இறைவார்த்தையால் தாங்கிப் பிடிக்கவும் அவர்கள் தங்கள் வாழ்வின் தடைகளைத் தாண்டவும் வழிகாட்டிட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**4. வழிகாட்டும் இறைவா!**

தேசிய விவிலியப் பணிக்குழுவிற்காகவும் மாநில விவிலியப் பணிக் குழுவிற்காகவும், மறைமாவட்ட மற்றும் பங்கு விவிலியப் பணிக் குழுக்களுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். இப்பணிக்குழுக்கள் இறைவார்த்தையின் சக்தியை எல்லா மக்களுக்கும் குறிப்பாக வார்த்தையிலிருந்து வெகுதூரத்திலிருக்கும் இளைஞர்களுக்கு இன்னும் வெகு சிறப்பாக அறிவித்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**5. புலம்பெயர்ந்தோரின் பாதுகாவலே இறைவா!**

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் துன்பங்களை திருக் குடும்பத்தின் துன்பங்களோடு இணைத்து வாழ்வில் பொருள் காண

அருள்தாரும். இழந்த உறவுகளை தேடும் பயணத்தில் இவர்கள் கிறிஸ்துவைக் காணவும் நல் இதயம் கொண்ட மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வழியாக இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்

*(தேவைக்கு ஏற்பத் தனிப்பட்ட மன்றாட்டுகளையும் சேர்த்துக் கொள்க)*

**மன்றாடுவோமாக.**

இரக்கமுள்ள தந்தையே! கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் என உமது மகன் வாக்களித்தாரே. அவரது வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து, நாங்கள் வாழ எங்கள் செபங்களையும், மன்றாட்டுகளையும் உம்மிடம் சமர்ப்பிக்கிறோம். எல்லா நேரத்திலும் உமது வார்த்தை மீது நம்பிக்கை வைத்து எங்கள் வாழ்வைத் தொடர கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

## காணிக்கைப் பவனி

'கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்று கூறிய நம் ஆண்டவரின் குரலைக் கேட்டு நமது பங்கில், மறைமாவட்டத்தில், தமிழகத்தில் திருவிவிலியப் பணிகள் சிறப்பாக நடைபெறும் விதத்தில் நம் உள்ளக் காணிக்கைகளை உவப்புடன் அளிப்போம். விவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கைகளைத் தாராள மனத்துடன் நாம் அளிப்பதன் வழியாக விவிலியப் பணிகளுக்கு நமது பங்களிப்பை வெளிப் படுத்துகிறோம், அதிகப்படுத்துகிறோம் என்பதை உணர்வோம்.

விவிலிய வங்கி தொடங்கி, அதற்குரிய விவிலியங்கள் காணிக்கையாக கொண்டு வரப்படலாம். இன்றிலிருந்து பங்குகளில் தொடங்கப்படும் இந்த விவிலிய வங்கி தொடர இக்காணிக்கைப் பவனி முதன் முயற்சியாகட்டும்.

*(பவனியின்போது அடையாளக் காணிக்கைகள் என்ற பெயரில் கோவிலுக்கு, பங்கிற்கு, மக்களுக்குப் பயன்படாதபொருள்களை வழங்குவது தவிர்க்கப்படுகிறது). மாறாக,*

- மலர்கள்
- மெழுகுத் திரிகள்
- விவிலியப் பிரதிகள்
- ஏழைகளுக்கு உதவும் கெட்டுப் போகாதபொருள்கள்
- கல்வி சம்மந்தப்பட்ட பொருள்கள்
- இறைவார்த்தை அட்டைகள்
- கோவிலுக்கு உதவும் பொருள்கள்

- ☛ அப்ப, இரசக் காணிக்கைகள்
- ☛ விவிலிய வாரக் காணிக்கைகள் (Covers with Money) ஆகியவை வழங்கப்படலாம்.
- ☛ விவிலிய வங்கிக்கான விவிலியங்கள்

## நற்கருணை வழிபாடு

### காணிக்கைமீது மன்றாட்டு

என்றும் வாழும் தந்தையே இறைவா! உமது வார்த்தை மனுவுருவாகி இந்த உலகை வாழவைக்கும் மேலான உமது செயலை நினைத்து நன்றி கூறுகின்றோம். நாங்கள் உமக்கு நேர்ந்தளிக்கும் இக்காணிக்கைகள் எங்களிடையே சகோதர உறவை வளர்க்கவும் வலுப்படுத்தவும் வேண்டுகின்றோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு

வாழ்வு தரும் அன்புத் தந்தையே இறைவா! வார்த்தையாலும் உணவாலும் எங்களுக்கு ஒவ்வொரு நாளும் நீர் கொடுக்கும் வாழ்வை நினைத்து மகிழ்வோடு உமக்கு நன்றி செலுத்துகின்றோம். நாங்கள் பெற்றுக் கொண்ட இந்த கொடைகள் நலிந்து கொண்டிருக்கும் மனித நேயத்தையும், தேய்ந்து கொண்டிருக்கும் மனித சகோதரத்துவத்தையும் வலுப்படுத்துவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### சிறப்பு ஆசீர்

**அருள்பணி : இறை ஆசி பெறத் தலை வணங்கி மன்றாடுவோம்**

1. எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவன் உங்களின் எல்லா முயற்சி களிலும் உடனிருந்து, உங்கள் கால் இடறாதபடி காத்தருள்வாராக...
2. உலகை அன்பு செய்ய, விண்ணிலிருந்து மண்ணகம் வந்த திருமகன் இயேசு தன் ஆற்றல்மிகு வார்த்தைகளால் உங்கள் வாழ்வைச் சீர்படுத்துவாராக.
3. புதுப்பிக்கும் தூய ஆவியாராகிய இறைவன் உங்களின் துன்பத்தில் உங்களுக்குத் துணையாகவும், இன்பத்தில் இணையாகவும் இருந்து உங்களுக்கு முன்பு வழிகாட்டியாகவும், பின்பு பாதுகாவலராகவும் இருப்பாராக.

எல்லாம் வல்ல இறைவன் ✠ தந்தை, மகன், தூய ஆவியார் உங்களுக்கு ஆசி வழங்குவாராக. ஆமென்.

ஆண்டவருடைய நற்செய்தி அறிவிக்கச் சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று. இறைவனுக்கு நன்றி.

**இறுதிப் பாடல்**

*விவிலிய வாரம், விவிலிய ஞாயிறு திருவழிபாட்டுக் குறிப்புகள் தயாரிப்பு.*

*தமிழக ஆயர் பேரவையின் விவிலியப் பணிக்குழு, முப்பணி மையம், திண்டிவனம்.*

**அருள்பணி. உபால்டு மரியதாசன்,**
*பொதுச்செயலர்,*
*தமிழக விவிலியப் பணிக்குழு,*
*முப்பணி மையம், திண்டிவனம்*

திருநூல் என்பது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நீரோடைக்குச் சமம். இந்த நீரோடையில் தங்கள் கால்களை இழக்காமலேயே யானையும் நீந்திச் செல்லலாம்; ஆடும் நடந்து செல்லலாம். **- திருத்தந்தை பெரிய கிரகோரி**

இறைவனின் திருநூல்களே உலகின் மிகச்சிறந்த தத்துவ நூலாக நாம் கொள்கின்றோம். உலகின் பிற வரலாற்றை விடவும் விவிலியத்தில்தான் நம்பகத்தன்மையின் பதிவுகள் அதிகமாக உள்ளன. **- சர் ஐசக் நியூட்டன்**

உண்மையானதும் மிக உன்னதுமான ஒரு கடவுள் எனில் அது விவிலியக் கடவுளாகத்தான் இருக்க முடியும். அதை இப்போது வாழும் இந்த மனித குலம் புரிந்து கொண்டிருக்கிறது. **- மாத்யூ அர்னால்டு**

பேராசை கொண்ட என்னுடைய, சீசருடைய, அலெக்சாண்டருடைய கனவுகள் எல்லாம் காற்றில் கரைந்து முடிந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு சாமானிய யூதன் இயேசுவோ நூற்றாண்டுகளாக உலக நாடுகளில் எல்லா மனிதர்களின் இலக்குகளை தன் நீட்டிய இரண்டு கரங்களால் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

**- பேரரசர் நெப்போலியன்**

உங்கள் கனிவான கவனத்திற்கு. . .

**உங்கள் பணித்தளங்களில் செப்டம்பர் மாத ‘இனிய தோழன்’ இதழை வாங்கி வாசிக்கச் செய்ய அன்புடன் வேண்டுகின்றோம் மற்றும் இனிய தோழன் இதழுக்கு சந்தாதாரர் ஆகுங்கள்.**

**இனிய தோழன் தொடர்பு எண் : 63 81 50 31 06**


தயாரிப்பு

**பொதுச்செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு**
**முப்பணி மையம், திண்டிவனம் – 604 001**

வெளியீடு

**இயக்குநர், முப்பணி மையம்,**
**திண்டிவனம் - 604 001.**


